சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.4105/ஆ6/2022, நாள். 7.10.2022

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி - கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு - காலாண்டுத் தேர்வு முடிந்து - விடுமுறை அளித்து - பள்ளித் தொடங்குவது குறித்து அறிவுரைகள் வழங்குவது - தொடர்பாக. |
| பார்வை 1 | சென்னை - 08, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4105/ஆ6/2022, நாள். .09.2022 |

--------

2022 - 2023 ஆம் கல்வியாண்டில் காலாண்டுத் தேர்வு முடிந்து பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 6 முதல் 10 வகுப்புகளுக்கு அக்டோபர் மாதம் 10 ஆம் தேதி அன்று பள்ளிகள் திறக்கப்படும் என பார்வையில் கண்டுள்ள இவ்வலுவலக செயல்முறைகள் மூலம் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 10.10.2022 அன்று பள்ளி திறக்கும் நாளில் கீழ்கண்ட விதிமுறைகளை பின்பற்றி செயல்பட அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

1. காலாண்டு விடுமுறைக்குப்பின் பள்ளிகள் 10.10.2022 அன்று திறக்கப்படும் தருவாயில் பள்ளி வளாகம், வகுப்பறைகள், குடிநீர்த் தொட்டி, கழிப்பறைகள் யாவும் சுத்தப்படுத்தி கிருமி நாசினி தெளித்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
2. வகுப்பறைகள் மற்றும் மாணவர்கள் பயன்படுத்தும் தளவாடப் பொருட்களை சுத்தமாகவும் மாணவர்கள் பயிலும் வகையில் சுகாதாரமானதாகவும் வைத்திட வேண்டும். மேலும் வகுப்பறைகளில் உரிய காற்றோட்ட வசதியுடன் அமைந்திருப்பதை உறுதி செய்திட வேண்டும்.
3. இரண்டாம் பருவ விலையில்லா பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் மாணவர்களுக்கு 10.10.2022 அன்றே வழங்கும் நிலையில் தயார்படுத்தியிருக்க வேண்டும்.
4. காலாண்டுத் தேர்வு விடைத்தாட்களை ஆசிரியர்கள் செவ்வனே திருத்தம் செய்து, பள்ளி காலாண்டு விடுமுறை முடிந்து, பள்ளித் திறக்கும் முதல் நாளே மாணவர்களுக்கு வழங்கி மதிப்பெண்களை பதிவு செய்திட அறிவுறுத்தப்பட வேண்டும்.
5. EMIS இல் மதிப்பெண் மற்றும் விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்ட விவரம் அனைத்தும் ஆசிரியர்கள் தங்களுடைய Login மூலம் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்த வேண்டும்.

6. மழைக்காலம் என்பதால் பள்ளி வளாகத்திலும் வகுப்பறைகளிலும் தேங்கிய நீர்நிலை இருந்தால், டெங்கு மற்றும் கொசுக்கள் இருக்கக்கூடும். எனவே நீர் தேங்கா வண்ணம் பராமரிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

7. மின் கம்பங்கள் பழுது பார்க்கப்பட்டு, மின் கசிவு ஏற்படாவண்ணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

8. பழுதடைந்த கட்டடங்கள் இருந்தால் மாணவர்கள் செல்லா வண்ணம் தடை செய்யப்பட்ட பகுதியாக குறிப்பிட்டு மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகளை பின்பற்றி பள்ளித் திறப்பதற்கு தேவையான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7/10/2022

முதன்மைக் கல்வி அலுவலருக்காக

சென்னை - 8

7/10

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர்கள்,

தென் சென்னை மற்றும் வட சென்னை.

நகல்

ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை-06 தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.